தினமணி

# இன்றைய வேளாண் செய்திகள்

## 19.08.2013

### கோவை, தேனியில் 250% கூடுதல் மழை: சென்னையில் இன்று மழை வாய்ப்பு

தென்மேற்குப் பருவ மழைக் காலம் தொடங்கிய இரண்டரை மாதங்களுக்குள் கோவை, தேனியில் 250 சதவீத மழை கூடுதலாகப் பதிவாகியுள்ளதாக வானிலை மையத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

தஞ்சாவூர், கடலூர், திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் புதுச்சேரி உள்ளிட்ட இடங்களிலும் சராசரி அளவைவிட அதிகமாக மழை பெய்துள்ளது.

தென் மேற்குப் பருவ மழை காரணமாக மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளுக்கு அருகில் உள்ள தமிழக மாவட்டங்களில் பலத்த மழை பெய்து வருகிறது. கேரளம், கர்நாடகம் மற்றும் ஆந்திர மாநிலங்களில் பருவ மழை தீவிரமடைந்துள்ளதால், அங்கிருந்து தமிழகத்தில் உள்ள அணைகளுக்கு நீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதன் காரணமாக மேட்டூர், பவானிசாகர், அமராவதி, பெரியாறு, சாத்தனூர், வைகை, பாபநாசம், ஆழியாறு உள்ளிட்ட அணைகள் நிரம்பத் தொடங்கியுள்ளன. அவற்றில் பெரும்பாலான அணைகளில் இருந்து பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

கூடுதல் மழை: கடந்த ஜூன் 1-ஆம் தேதியிலிருந்து ஆகஸ்ட் 14-ஆம் தேதி வரை கோவையில் 261 சதவீத மழை கூடுதலாக பெய்துள்ளது. அதே போல தேனியில் 242 சதவீதமும், திருநெல்வேலியில் 99 சதவீதமும் கூடுதலாக மழை பதிவாகியுள்ளது. கன்னியாகுமரி மற்றும் கடலூர் மாவட்டங்களில் முறையே 26, 28 சதவீத மழை சராசரி அளவைவிட அதிகமாக பெய்துள்ளது. தென்மேற்கு பருவ மழைக் காலம் முடிய இன்னும் சில வாரங்கள் இருப்பதால், கோவை, தேனி

உள்ளிட்ட மேற்குத் தொடர்ச்சி மலைக்கு அருகில் உள்ள மாவட்டங்களில் மழை நீடிக்க வாய்ப்புள்ளதாக வானிலை மையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வானிலை முன்னறிவிப்பு: சென்னை, புறநகர்ப் பகுதிகளில் திங்கள்கிழமை மழையோ, இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது. தமிழகம், புதுச்சேரியின் சில இடங்களில் மழை பெய்யக் கூடும்.

ஞாயிற்றுக்கிழமை காலை வரை பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்): கோத்தகிரி - 50, தஞ்சாவூர், மதுரை மாவட்டம் சிட்டாம்பட்டி - 30, பாளையங்கோட்டை, நத்தம், மேட்டூர், பாபநாசம், காரைக்குடி, முதுகுளத்தூர் - 20.

**23-ல் பவானிசாகர் அணை திறப்பு: முதல்வர் ஜெயலலிதா உத்தரவு**



பவானிசாகர் அணையிலிருந்து வரும் ஆகஸ்ட் 23-ஆம் தேதி முதல் விவசாயத்துக்குத் தண்ணீர் திறந்துவிட முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக ஞாயிற்றுக்கிழமை அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:-

ஈரோடு மாவட்டம், பவானி சாகர் அணையிலிருந்து கீழ்பவானி திட்டப் பிரதான கால்வாய் மற்றும் நீட்டிப்புக் கால்வாய் ஒற்றைப்படை மதகுகள் மூலமாகவும், சென்ன சமுத்திரம் பகிர்மான கால்வாய், இரட்டைப் படை மதகுகள் மூலமாகவும் முதல் பருவ நன்செய் ஆயக்கட்டு நிலங்களுக்குத் தண்ணீர் திறந்துவிடுமாறு வேளாண் மக்களிடமிருந்து எனக்குக் கோரிக்கைகள் வந்துள்ளன.

இதனையேற்று, பவானிசாகர் அணையிலிருந்து கீழ்பவானி திட்ட பிரதான கால்வாய் மற்றும் நீட்டிப்புக் கால்வாய் ஒற்றைப்படை மதகுகள் மூலமாகவும், சென்ன சமுத்திரம் பகிர்மான கால்வாய் இரட்டைப்படை மதகுகள் மூலமாகவும்

முதல் பருவ நன்செய் ஆயக்காட்டு நிலங்களுக்கு ஆகஸ்ட் 23-ஆம் தேதி முதல் தண்ணீர் திறந்துவிட ஆணையிட்டுள்ளேன்.

இதனால் ஈரோடு, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள 1,03,500 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்று அவர் கூறியுள்ளார்.

**காய்கறி மொத்த விற்பனை: விவசாயிகளை நேரடியாக ஈடுபடுத்த புதிய திட்டம்**



காய்கறி மொத்த விற்பனையில் விவசாயிகளை நேரடியாக ஈடுபடுத்த தமிழக அரசு புதியத் திட்டத்தை அறிமுகப்படுத்த உள்ளது.

சென்னை புறநகர் காய்கறி உற்பத்தித் திட்டம் என்ற பெயரில் காய்கறி மொத்த விற்பனையில் விவசாயிகளே நேரடியாக ஈடுபட தமிழக தோட்டக்கலைத்துறை புதிய திட்டத்தை செயல்படுத்த உள்ளது. அதவாது சென்னையில் கூட்டுறவு அங்காடிகள் மூலம் பொதுமக்களுக்கு குறைந்த விலையில் காய்கறி கிடைக்கச் செய்வதைபோல இத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதாவது பொதுமக்களுக்கும் குறைந்த விலையில் காய்கறி கிடைக்கச் செய்ய வேண்டும். அதே நேரத்தில் விவசாயிகளுக்கும் அவர்களுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்க வேண்டும் என்பதே இத்திட்டத்தின் நோக்கம். இத்திட்டம் சென்னை தவிர கோவை, திருச்சி ஆகிய மாநகரப் பகுதிகளிலும் செயல்படுத்தப்பட உள்ளது.

சென்னை புறநகர் காய்கறி உற்பத்தித் திட்டத்தின்கீழ் காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய 5 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. முதலில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் இத்திட்டத்தை செயல்படுத்தும் வகையில் விவசாயக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் தலைவர், செயலாளர், துணைத் தலைவர்

ஆகியோர் மட்டத்திலான ஆலோசனைக் கூட்டம் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராக வேளாண்துறை முதன்மைச் செயலாளர் சந்தீப் சக்சேனா கலந்துகொண்டு விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதிலளித்தார். முடிவில் அவர் செய்தியாளர்களிடம் கூறியது: தமிழக முதல்வரின் வேண்டுகோளின்படி, சென்னை புறநகர் காய்கறி உற்பத்தித் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டம் தமிழக தோட்டக்கலைத்துறை மூலம் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின்கீழ் விவசாயிகள் நேரடியாக மொத்த விற்பனையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் சென்னை, கோவை, திருச்சி ஆகிய மாநகராட்சிகளில் முதலில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை புறநகர் காய்கறி திட்டத்தில் காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம் ஆகிய 5 மாவட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இதற்காக விவசாயிகள் அடங்கிய குழுக்கள் அமைக்கப்படும். அந்த குழுவில் 15 முதல் 20 விவசாயிகள் இருப்பர். முதலில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 47 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் இதுவரை மொத்தம் 850 விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர்.

இக்குழுவினர்களிடம் இருந்து காய்கறிகளை சேகரிக்க மாவட்டத்தில் 5 சேகரிப்பு மையங்கள் அமைக்கப்பட உள்ளது. சேகரிப்பு மையம் அமைக்க செங்கல்பட்டு, பீர்க்கன்கரணை, கீழ்மருவத்தூர், பெரும்பாக்கம், மருத்துவம்பாடி ஆகிய 5 ஊர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்த சேகரிப்பு மையங்களுக்கு, விவசாயக் குழுவினர் நேரடியாக காய்கறிகளைக் கொண்டுவர வேண்டும். இங்கிருந்து காய்கறிகள் மொத்தமாக விற்பனை செய்யப்படும். இந்த குழுவினரே சேகரிப்பு மையங்களை அமைத்துக் கொள்ள வேண்டும். அதற்கான மானியம் அரசு வழங்கும். மேலும் விளைநிலங்களில் இருந்து, சேகரிப்பு மையங்களுக்கு காய்கறிகளை கொண்டுவர சரக்கு வேன் உள்ளிட்ட வாகனங்கள் வாங்க விவசாயக் குழுக்களுக்கு அரசு 40 சதவீதம் மானியம் வழங்கும். மேலும் காய்கறி சேதாரத்துக்கு காய்கறிகளைப் பொறுத்து 30 சதவீதம் வரை சேதாரம் மதிப்பிடப்படும்.

அந்தந்த பகுதிகளில் எந்த வகை காய்கறிகள் விளையுமோ, அது குறித்து விவசாயிகளுக்கு தோட்டக்கலைத் துறை மூலம் உரிய பயிற்சி அளிக்கப்படும்.

தரமான காய்கறி விதை, உரம், பூச்சிக்கொல்லி மருந்து உபயோகிப்பது குறித்தும் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படும். விலை நிலவரங்கள் குறித்து விவசாயிகளுக்கு அன்றாடம் ஆலோசனை வழங்கப்படும். இந்த விற்பனை மையங்களில் மொத்த வியாபாரிகள், சில்லறை வியாபாரிகள், விடுதிகள் உள்பட மொத்தமாக காய்கறி கொள்முதல் செய்பவர்கள் செய்து கொள்ளலாம். செப்டம்பர் முதல் வாரத்தில் செங்கல்பட்டு சேகரிப்பு மையத்தை செயல்படுத்த தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. அதைத் தொடர்ந்து படிப்படியாக அனைத்து மையங்களையும் செயப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். கோவையிலும் இதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. திருச்சியில் இதற்கான பணிகள் விரைவில் தொடங்கும் என்றார் முதன்மைச் செயலாளர் சந்தீப் சக்சேனா.

இந்த சந்திப்பின்போது தோட்டக்கலைத்துறை ஆணையர் சத்தியவிரத சாகூ, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் லி. சித்ரசேனன் ஆகியோர் உடனிருந்தனர்.

**ஏற்றத்தாழ்வு உண்டு; எழுச்சி இல்லை**

கடந்த முப்பது ஆண்டுகளாக உலகமயமாதல் என்ற மாயமான் தோற்றுவித்துள்ள ஏற்றத்தாழ்வு வளர்ந்து செல்வதாக உலகளாவிய நிலையில் பல்வேறு பொருளாதார அறிக்கைகள் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

இந்த ஏற்றத்தாழ்வு வளர்ச்சியுற்ற வடக்கு நாடுகளில் சொற்பமாகவும் வளரும் நாடுகளில் மிகுந்தும் காணப்படுகிறது. இந்தியாவிலும் சரி ஏனைய தெற்கு நாடுகளிலும் சரி சொத்துகளிலும், வருமானத்திலும் ஏற்பட்டுள்ள ஏற்றத் தாழ்வுகளைத் துல்லியமாகவே கவனிக்கலாம்.

கடந்த நூற்றாண்டில் வருமானத்திலும் சொத்திலும் தோன்றிய ஏற்றத்தாழ்வு காரணமாக ரஷியாவிலும் சீனாவிலும் கம்யூனிசப் புரட்சி ஏற்பட்டது. இந்தியாவில் சோஷலிசக் கருத்துகள் வேர்விட்டன. என்ன பயன்? லெனின் பிறந்த நாட்டில் ஊழல் உண்டு. மா.சே.துங் பிறந்த நாட்டிலும் ஊழல் உண்டு. காந்தியும் நேருவும் பிறந்த நாட்டிலும் ஊழல் சந்தி சிரிக்கிறது. தொழில்புரட்சி ஏற்பட்டது பிரிட்டனில். தொழிலாளர் புரட்சி ஏற்பட்டது சோவியத் ரஷியாவில். இன்று தொழிலாளர் வருமானத்திலேயே ஏற்றத்தாழ்வு உள்ளபோது, தொழிற்சங்கப் பொருளாதாரம் எதுவும் சமதர்மத்தை ஏற்படுத்தும் என்பது மதியீனம்.

கருப்புப்பணமும் உலகளாவியதாக உள்ளது. வளர்ச்சியை மையமிட்ட வளரும் நாடுகளும், கம்யூனிச - சோஷலிச நாடுகளும் உலகமயமாதல் என்ற மாயமான் வலையில் விழுந்த பின்னர், கிடைத்த பலன் வீழ்ச்சியே தவிர வளர்ச்சி இல்லை.

இன்று உலகமயமாதலுக்குப் பின் விளைந்த ஏற்றத்தாழ்வை இந்தியாவில் கவனிக்க எந்தப் புள்ளிவிவரமும் தேவையில்லை. இந்திய ஏற்றத்தாழ்வு பிரத்தியட்ச ரூபிணியாகக் காட்சி தருகிறது. இந்தியாவில் உள்ள 100 கோடி மக்களில் 50 கோடி மக்கள் வறுமைக்கோட்டில் வாழ்கின்றனர். சராசரி மாதவருமானம் இவர்களுக்கு ரூ. 2,000-ஐ விடக் குறைவுதான். மீதி 50 கோடி மக்களில் சுமார் 40 கோடி மக்களின் வருமானம் ரூ. 2,000-லிருந்து ரூ. 10,000 என்று கொள்ளலாம்.

இந்த வரிசையில் விவசாயத் தொழிலாளர்கள், நிரந்தரமற்ற வேறுதுறைப் பணியாளர்கள் அடங்குவர். மீதி 10 கோடி மக்களில் சுமார் 9 கோடி மக்கள் கீழ்நிலை நடுத்தரவர்க்க அறிவுஜீவிகள், எழுத்தர்கள், எழுத்தாளர்கள். சிறு வியாபாரிகள் வருமானம் மாதம் ரூ. 20,000 முதல் 1,00,000 வரை வேறுபடலாம். மீதி 1 கோடி மக்களின் வருமானம் 1,00,000-க்கு மேல் பில்லியன் வரை என்று கொள்வோமானால், இதில் கீழ்வரிசையில் மேல்தட்டு நடுத்தர வர்க்கம் கார்ப்பரேட் எக்சிக்யூட்டிவ்கள், நிர்வாக இயக்குநர்கள், நீதிபதிகள், மாவட்ட ஆட்சித் தலைவர், மேல்மட்ட கெஜட்டட் அலுவலர்கள், நடுத்தரத் தொழில் அதிபர்கள் எண்ணிக்கை சுமார் 50 லட்சம். மேல்மட்ட அதிகார வர்க்கம் அபாரமாக, 1,00,000 ரூபாய் முதல் 10,00,000 வரை வருமானம் பெறலாம். மீதி 50 லட்சத்தில் அடங்குவோர் அரசியல்வாதிகள், ரியல் எஸ்டேட் முதலாளிகள், பெரிய தொழிலதிபர்கள், கருப்புப் பண முதலாளிகள். இவர்களில் அநேகமாக ஆயிரம் பேர் உலகப் பணக்காரர்கள் வரிசையில் வரக்கூடிய மில்லியன் பில்லியனர்களாக இருப்பார்கள்.

வளர்ச்சி என்பது இந்தியாவில் 1 சதவீத மக்களுக்கு லாபம் வழங்கியிருக்கலாம். மீதி 99 சதவீத மக்களுக்கு லாபம் இல்லாதது மட்டுமல்ல அவர்களை இலவசங்களுக்கு ஏங்கும் மக்களாக்கிவிட்டது. இவ்வளவு ஏற்றத்தாழ்வு இருந்தாலும் மக்கள் எழுச்சி ஏற்படவில்லை.

வறுமையை ஒழிப்பது ஏற்றத்தாழ்வைப் போக்குவது எல்லாம் ஒரு நாட்டின் பொருளாதார எழுச்சிக்கு அறிகுறி. உலக அரசியலில் கம்யூனிசமும் சோஷலிசமும் தோற்றுவிட்டாலும் முதலாளித்துவ அடிப்படையில் ஏற்றத்தாழ்வையும் வறுமையையும் ஒழிக்கும் எழுச்சி 1929-இல் தோன்றி 10 ஆண்டுக்காலம் உலகை ஆட்சி செய்த மாபெரும் வீழ்ச்சியை (கிரேட் டிப்ரஷன்) ஒழிக்க கண்டுபிடிக்கப்பட்டது. அதன் பெயர் ஜி.டி.பி. அதுதான் இந்தியாவில் ஆட்சி செய்கிறது.

1930-இல் கடைந்தெடுக்கப்பட்ட ஒரு சொல்லாட்சிதான் ஜி.டி.பி. என்ற ஒட்டு மொத்த உற்பத்தி, பணி வருமான மதிப்பு. இது உயர்ந்தால் வளர்ச்சி ஏற்பட்டு வீழ்ச்சி மடிந்து நாடு வளம் பெறும் என்று நம்பப்பட்டது. 1929 முதல் 1940 வரை மாபெரும் பொருளாதார வீழ்ச்சி நீடித்த காலகட்டத்தில் ஹிட்லரின் நாசிசத்தை எதிர்த்து நிகழ்ந்த இரண்டாவது உலகப்போர் காரணமாக நிகழ்ந்த எழுச்சி பொருளாதார வீழ்ச்சியைக் காப்பாற்றியுள்ளது.

இப்படிப்பட்ட போர் அரசியல் காலகட்டத்தில் பொருளாதார வீழ்ச்சியைப் போக்க ரூஸ்வெல்ட்டுக்கு ஆலோசனை வழங்கிய ஜான் மேனார்டு கீன்சை உலகம் அறியும். ஆனால் ஜி.டி.பியைக் கண்டுபிடித்த சைமன் குஸ்நட்ஸ் என்ற அமெரிக்கப் பொருளியல் மேதையைப் பற்றிப் பலர் அறிய மாட்டார்கள். இவர் ரஷியாவில் பிறந்தவர். கீன்சைப்போல் இவரும் வீழ்ச்சியைப் போக்கிப் பொருளாதாரத்தை உயர்த்த திட்டங்கள் வகுத்தார். வருமான ஏற்றத்தாழ்வைப் போக்க முதற்கண் தேசவருமானம் பற்றிய புள்ளிவிவரமும் சொத்து, பணிகள், தொழில் உற்பத்தி பற்றிய பணமதிப்பையும் கணக்கிட்டு ஜி.டி.பியை நிர்ணயித்தபின், வருமான வினியோகம் பற்றி திட்டமிட வேண்டுமென்றார்.

ஜி.டி.பி என்ற கருத்து குஸ்நட்ஸுடையது என்றாலும் முதல் முதலாக உலகில் தேசவருமானம் பற்றிய மதிப்பீட்டைச் செய்தவர் தாதாபாய் நவ்ரோஜி (1868). பின்னர் வில்லியம் டிக்பி, பின்ட்லே ஷிர்ராஸ், (1900 - 1911) ஷா மற்றும் கம்பாட்டா (1921) ஆகியோரும் இந்திய தேசவருமானத்தை மதிப்பிட்டுள்ளனர்.

குஸ்நட்ஸின் சமகாலத்தில் இந்தியாவில் வி.கே.ஆர்.வி. ராவ் மற்றும் ஆர்.சி. தேசாய் கணக்கிட்டார்கள். அமெரிக்காவில் குஸ்நட்சைப் பின்பற்றி வி.கே.ஆர்.வி. ராவ் விஞ்ஞான ரீதியாக இந்திய தேச வருமானம் கணக்கிடும் வழிமுறையைச்

செய்துள்ளார். அன்று ராவ் போட்ட கணக்கு முறையைத்தான் தேசிய திட்ட மாதிரி ஆய்வுகள் கடைப்பிடிக்கின்றன.

1955-இல் சைமன் குஸ்நட்ஸ் வருமான ஏற்றத்தாழ்வைப் பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், ""வளர்ச்சியின் தொடக்கத்தில் ஒரு சமூகம் விவசாயத்தை மட்டுமே நம்பியுள்ளபோது தனிநபர் வருமானம் குறைவாயிருக்கும். ஏற்றத்தாழ்வு இடைவெளியும் குறைவாக இருக்கும். தொழில் வளர்ச்சியும், நகரமயமாதலும் நிகழும்போது பொருளாதார வளர்ச்சி வேகமாகச் செல்லும். அதேசமயம் வருமான ஏற்றத்தாழ்வும் அகண்டு செல்லும். குறைந்த வருமானமுள்ளவர்கள் கொதித்து எழுவார்கள். அவர்கள் அரசியல் அதிகாரம் பெற்று ஏற்றத்தாழ்வு இடைவெளியைக் குறைக்கக்கூடிய சமூக முதலீடுகளான நலவாழ்வு, கல்வி, தொழிலாளர் நலன் என்று செலவிடும்போது, ஏற்றத்தாழ்வு இடைவெளி குறையும்" என்று கூறியுள்ளார். அப்படி எதுவும் இந்தியாவில் நிகழவில்லை. குஸ்நட்ஸ் கூறியதைத்தான் அமார்த்தியா சென்னும் இப்போது கூறி வருகிறார்.

தமிழ்நாட்டில் மண்வெட்டி, கடப்பாரை பிடித்து கடினமான வேலை செய்யும் ஒரு விவசாயத் தொழிலாளிக்கு தினம் ரூ. 400 வருமானம் உண்டு. 30 நாள்களில் 15 முதல் 20 நாள்கள் வேலைக்குச் செல்வதாகக் கொண்டால் மாதம் ரூ. 5,000 முதல் 6,000 வருமானம் என்று கொள்ளலாம். அப்படிப்பட்ட ஒரு விவசாயத் தொழிலாளி தனது பிள்ளைகளை ஆங்கிலப் பள்ளியில் சேர்க்க ஆசைப்படுகிறார். எல்.கே.ஜி. படிக்கவே மாதம் சராசரி ரூ. 800 செலவாகும். அவர் குடும்பத்தில் யாருக்காவது நோய் வரும்போது கிராமத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் செல்வதில்லை. அது அருகில் இருக்காது. இருந்தாலும் கவனிக்க மாட்டார்கள். ஆகவே, பணம் பறிக்கும் தனியார் மருத்துவமனைகளே கதி. ஜுரம், வயிற்றுவலி என்று சென்றாலே ரூ. 500-க்கு மேல் தனியார் மருத்துவமனையில் செலவு செய்ய வேண்டியுள்ளது.

தனியார் ஆங்கிலப் பள்ளியும், தனியார் மருத்துவமனையும் விவரம் அறியாத அப்பாவித் தொழிலாளர்களின் பணத்தை அட்டை உறிஞ்சுவது போல் உறிஞ்சிவிடுகின்றன. பற்றாததற்குப் பற்றாக்குறைப் பொருளாதாரம், பணவீக்கம், விலைவாசி உயர்வு போன்றவை அடித்தட்டு மக்களுக்கு எவ்வளவு துயரம் இருந்தாலும், சகித்துக்கொண்டு கூட்டுவட்டிக்குக் கடன் வாங்கி வட்டி கட்டியே வாழ்நாளை ஓட்டுகிறார்கள்.

சொத்துக் கணக்குக்கு வந்தால் நாட்டின் ஒட்டு மொத்த சொத்துகளில் சுமார் 50 சதவிகிதம் மேல்மட்டப் பணக்காரர்கள் வரிசையில் உள்ள ரியல் எஸ்டேட் அதிபதிகள், உலகப் பணக்காரர்கள் வரிசையில் வரக்கூடிய இந்தியத் தொழிலதிபர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள், மக்களவை மாநிலங்களவை அமைச்சர்கள், எம்.பி., எம்.எல்.ஏ.க்கள், ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சித் தலைவர்கள் அடங்கலாம்.

நமது மதிப்பிற்குரிய நிதியமைச்சர் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசுதான் வளர்ச்சிப் பாதையை உருவாக்கி ஜி.டி.பி.யை உயர்த்தியுள்ளது என்று ஒவ்வொரு கூட்டத்திலும் சொல்வதுண்டு. நிதியமைச்சரின் பேச்சில் இரண்டு தப்பெண்ணங்கள் உள்ளன. முதலில், வளர்ச்சியில் வீழ்ச்சியே கண்ட பலன். 2004 - 2008 - களில் 10 முதல் 13 சதவீதமாயிருந்த ஜி.டி.பி வளர்ச்சி 2011 - 12-இல் 6.5 சதவீதமாகக் குறைந்து 2012 - 13-இல் 5.4 சதவீதமாகக் குறைந்துள்ளது.

இரண்டாவது தப்பெண்ணம், வளர்ச்சிக்கும், வறுமை ஒழிப்புக்கும் தொடர்பு இல்லை. எதிர்பார்த்த அளவில் வளர்ச்சி வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தொழிலாளர்களின் வருமானத்தை உயர்த்தவில்லை. ஏழைமக்களின் வருமான உயர்வுக்கும் ஜி.டி.பி வளர்ச்சிக்கும் தொடர்பு உள்ளதாக நிதியமைச்சர் கூறுவது, உண்மைக்குப் புறம்பானது.

ஜி.டி.பி.யில் தொழிலாளர் சம்பளத்தின் பங்கு கடந்த 20 ஆண்டுகளில் 30 சதவீதம் குறைந்துள்ளதாக உலகத் தொழிலாளர் நல அமைப்பு கோடிட்டுக் காட்டியுள்ளது. ஏழைகளின் வருமானம் எப்படி உயரும்? ஜி.டி.பி. கணக்கில் வராத கருப்புப் பணம் உங்கள் கையில். அது வருமான வரியை ஏமாற்றிய பணம். எங்கள் பணம் என்று சொல்லி 435 ரூபாயை ஆதார அட்டைப்படி எங்கள் கணக்கில் வங்கியில் சேர்ப்பித்துவிட்டு ரூ. 900 கொடுத்து கேஸ் சிலிண்டர் வாங்கச் சொன்னால் நாங்கள் எங்கே போவோம்? என்று ஒரு தொழிலாளி கூறுவது நிதியமைச்சரின் செவியில் விழுந்தாலும்கூட அவரால் பேச முடியாது - வாழ்க பாரதம்!

கட்டுரையாளர்: இயற்கை விஞ்ஞானி.

## தொடர் மழையால் விளைந்த நெற் பயிர் சேதம்: இழப்பீடு வழங்க விவசாயிகள் கோரிக்கை

தொடர் மழை காரணமாக அறுவடைக்கு தயாராக இருந்த நெல் பயிர் தண்ணீரில் மூழ்கியுள்ளது. மழையால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் இழப்பீடு வழங்கவேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடலூர் அருகே சி.என்.பாளையத்தைச் சேர்ந்த விவசாயிகள் கிருபானந்தம், ராஜதுரை, தனசேகர், சந்திரசேகர் உள்ளிட்ட 50 பேர் மாவட்ட ஆட்சியர் ரா.கிர்லோஷ்குமாரிடம் வெள்ளிக்கிழமை அளித்த மனு விவரம்:

இந்த கிராமத்தில் குறுவைப் பட்டத்தில் பயிரிடப்பட்ட நெல் பயிர் விளைந்து அறுவடைக்கு தயார் நிலையில் இருந்தது. இந்த நிலையில் கடந்த ஒரு வாரமாக பெய்துவரும் தொடர் மழையால் வயல்களில் தண்ணீர் தேங்கி விளைந்த நெல் கதிர்கள் தண்ணீரில் மூழ்கி கிடக்கின்றன.

சுமார் 500 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்ட நெல் பயிர் தொடர்ந்து தண்ணீரில் கிடப்பதால், கதிர்கள் முளைக்க தொடங்கிவிட்டன. ஏக்கருக்கு 40 மூட்டை மகசூல் எதிர்பார்த்த நிலையில் தற்போது 5 மூட்டை அளவு கூட கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் இந்த கிராமத்தில் மட்டும் சுமார் ரூ.2 கோடி அளவுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது.

இப்பகுதி விவசாயிகளின் துயர் துடைக்க, அதிகாரிகளை கொண்டு ஆய்வு மேற்கொண்டு பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் இழப்பீடு வழங்க மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

## தொடர் மழையால் விளைந்த நெற் பயிர் சேதம்: இழப்பீடு வழங்க விவசாயிகள் கோரிக்கை

தொடர் மழை காரணமாக அறுவடைக்கு தயாராக இருந்த நெல் பயிர் தண்ணீரில் மூழ்கியுள்ளது. மழையால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் இழப்பீடு வழங்கவேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடலூர் அருகே சி.என்.பாளையத்தைச் சேர்ந்த விவசாயிகள் கிருபானந்தம், ராஜதுரை, தனசேகர், சந்திரசேகர் உள்ளிட்ட 50 பேர் மாவட்ட ஆட்சியர் ரா.கிர்லோஷ்குமாரிடம் வெள்ளிக்கிழமை அளித்த மனு விவரம்:

இந்த கிராமத்தில் குறுவைப் பட்டத்தில் பயிரிடப்பட்ட நெல் பயிர் விளைந்து அறுவடைக்கு தயார் நிலையில் இருந்தது. இந்த நிலையில் கடந்த ஒரு வாரமாக பெய்துவரும் தொடர் மழையால் வயல்களில் தண்ணீர் தேங்கி விளைந்த நெல் கதிர்கள் தண்ணீரில் மூழ்கி கிடக்கின்றன.

சுமார் 500 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்ட நெல் பயிர் தொடர்ந்து தண்ணீரில் கிடப்பதால், கதிர்கள் முளைக்க தொடங்கிவிட்டன. ஏக்கருக்கு 40 மூட்டை மகசூல் எதிர்பார்த்த நிலையில் தற்போது 5 மூட்டை அளவு கூட கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் இந்த கிராமத்தில் மட்டும் சுமார் ரூ.2 கோடி அளவுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது.

இப்பகுதி விவசாயிகளின் துயர் துடைக்க, அதிகாரிகளை கொண்டு ஆய்வு மேற்கொண்டு பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் இழப்பீடு வழங்க மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

**இயற்கை உணவு தயாரிப்பு பயிற்சி கருத்தரங்கு**

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் இயற்கை உணவு தயாரிக்கும் பயிற்சி மற்றும் இயற்கை வாழ்வியல் கருத்தரங்கம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

திருப்பத்தூர் மனவளக்கலைமன்ற அறக்கட்டளையும் அரிமா சங்கமும் இணைந்து இயற்கை உணவு தயாரிப்பு பயிற்சி முகாம் மற்றும் இயற்கை வாழ்வியல் கருத்தரங்கினை ஞாயிற்றுக்கிழமை நடத்தின. திருப்பத்தூர் அறிவு திருக்கோயிலில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு டாக்டர்.சுகுமார் தலைமை வகித்தார். ஆசிரியர் ஏ.டி.விக்டர், பேராசிரியர் அரசரெத்தினம், சுப்பையா ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னதாக அரிமா ராஜகோபால் வரவேற்றார். இப்பயிற்சி முகாமில் இயற்கை உணவியல் மருத்துவர் மாறன்ஜி, யோகா கலைஞர் ரமேஷ், சிறுதானிய உணவு கலைஞர் காயத்திரி ஆகியோர் பயிற்சியாளராக கலந்து கொண்டனர். பின்னர் மாலை நடைபெற்ற இயற்கை வாழ்வியியல் கருத்தரங்கில் இன்றைய பரபரப்பான வாழ்க்கையில் முன்னோர்கள் கடைப்பிடித்து வந்த வாழ்க்கை முறைகளை மாற்றி உணவு பழக்க வழக்கங்களையும் மாற்றி நோய்களுக்கு ஆட்படுகிறோம். அவற்றிலிருந்து விடுபட இயற்கை உணவுகளை தேர்ந்தெடுத்து உண்ணவேண்டும்.

தவறான உணவு நோயாக மாறுகிறது என்று கருத்தரங்கில் எடுத்துக் கூறப்பட்டது. இந்த இயற்கை உணவு முகாமிற்கு வந்தவர்களுக்கு உயிராற்றல் தரும் உன்னத உணவு வகைகளை உணவியல் கலைஞர்கள் மற்றும் நிபுணர்கள் கற்றுத் தந்தார்கள். மேலும் அடுப்பில்லா உணவு வகைகளும் செய்து காண்பிக்கப்பட்டது. இப்பயிற்சி மற்றும் கருத்தரங்கில் பொதுமக்கள் மற்றும் உடற்கல்வி ஆசிரியர் வாசு, சமூக சேவகர் வீரபாண்டியன் ஆகியோர் பங்கு கொண்டனர்.

**தேங்காய், கொப்பரை விலை செப்டம்பரில் உயரும்**

தேங்காய் மற்றும் கொப்பரையின் விலை செப்டம்பர் மாதம் உயரும் என்று, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

உணவு, பானம், நார், எரிபொருள் ஆகிய பயன்பாடுகளுக்கு தென்னை பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்தியா, பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா ஆகிய நாடுகள் தென்னையை அதிக அளவில் பயிரிட்டு வருகின்றன. வேளாண்மை அமைச்சகத்தின் ஆய்வின்படி 2012-13இல் 2.13 மில்லியன் எக்டேரில் தென்னை பயிரிடப்பட்டு 15.35 மில்லியன் டன் தேங்காய் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

இதில் 35.95 சதவிகித பரப்பளவில், மொத்த தேங்காய் உற்பத்தியில் 25.89 சதவிகித உற்பத்தியை மேற்கொண்டு கேரளம் முதலிடத்தில் உள்ளது. கோவை, தஞ்சாவூர், கன்னியாகுமரி, வேலூர், ஈரோடு, தேனி, திருநெல்வேலி, கிருஷ்ணகிரி, சேலம், மதுரை ஆகியவை தேங்காய் உற்பத்தி செய்யும் தமிழகத்தின் முக்கிய மாவட்டங்கள்.

தேங்காயின் மொத்த உற்பத்தியில் 70 சதவிகிதம் வரை எண்ணெய்க்காகப் பயன்படுத்தப்படுகிறது. தென்னை மற்றும் கொப்பரையின் விலை தேங்காய் எண்ணெய்யின் விலையைப் பொருத்தே அமையும். தேங்காயின் பருப்பு, கொப்பரையின் அளவு மற்றும் எண்ணெய் சத்து உள்ளிட்ட தரத்தைக் கொண்டு விலை மாறுபடும். தற்போது 30 சதவிகித அளவிற்கு உற்பத்தி குறைந்துள்ளது. இதன் காரணமாக கர்நாடக மாநிலத்தில் இருந்து ஆகஸ்ட் மாதம் தேங்காய் கொண்டு வரப்பட உள்ளது.

பெரு நிறுவனங்களின் தேவை குறைவு, உள்ளூர்ப் பயன்பாடு, ஏற்றுமதி குறைவு மற்றும் மலிவான உணவு எண்ணெய் இறக்குமதி போன்ற காரணங்களால் தேங்காய் எண்ணெயின் விலை குறைந்துள்ளது.இதன் காரணமாக உபரி தேங்காயின் எண்ணிக்கை உயர்ந்தது. இதனால் கொப்பரையை கிலோவுக்கு ரூ. 52.50 என்ற விலையில் அரசு கொள்முதல் செய்து வருகிறது. மொத்த சந்தையில் தேங்காய் எண்ணெய் கிலோவுக்கு ரூ. 63-க்கும், கொப்பரை கிலோ ரூ. 45-க்கும், தேங்காய் கிலோ ரூ. 10 முதல் ரூ. 12 வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது.தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகத்தில் இயங்கி வரும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம் சார்பில், பொள்ளாச்சி மற்றும் அவல்பூந்துறை சந்தையில் ஆய்வு மேற்கொண்டது.

இதன்மூலம் செப்டம்பர் மாதத்தில் இருந்து தேங்காய் மற்றும் கொப்பரையின் விலை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

அதே நேரத்தில் தசரா மற்றும் தீபாவளி பண்டிகையின் போது விலை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

செப்டம்பர் மாதத்தில் ஒரு தேங்காய்க்கு பண்ணை அளவில் ரூ. 1 முதல் ரூ. 2 வரை விலை உயரும். அதே நேரத்தில் கொப்பரை கிலோவுக்கு ரூ. 50 வரை அதிகரிக்க வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.மேலும் விவரங்களுக்கு 0422-2431405, 6611284 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

**தீவனம் சேமிக்கும் பணி தீவிரம்**

கோபி சுற்று வட்டாரத்தில் கால்நடைகளுக்கான தீவனம் சேமித்து வைக்கும் பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

கோபி சுற்று வட்டாரத்தில் சிறுவலூர், கொளப்பலூர், கெட்டிசேவியூர், குருமந்தூர், நம்பியூர் உள்ளிட்ட பகுதிகளில் கிணற்று நீரை நம்பியே விவசாயம் செய்யப்படுகிறது. குறிப்பாக, பருவ காலங்களில் பெய்யும் மழைநீரை ஆதாரமாக கொண்டே மானாவாரி நிலங்கள் உள்ளன.

கடந்த இரண்டு ஆண்டுகளாக மழை இல்லாததால், கிணற்று நீர் மற்றும் போர்வெல் மூலம் உழவு செய்து, சோளம் விதைப்பு செய்தனர். ஒரு ஏக்கரில்

சோளம் சாகுபடி செய்ய, விதைப்பு முதல் அறுவடை காலம் வரை சராசரி ரூ.10 ஆயிரம் முதல் ரூ.15 ஆயிரம் வரை செலவாகிறது.

கோபி, சிறுவலூர், கொளப்பலூர், கெட்டிசேவியூர், குன்னத்தூர், குறிச்சி, தாளப்பதி, நம்பியூர், திங்களூர், கோசனம், மந்திரிபாளையம் உள்ளிட்ட பகுதிகளில் சோளப்பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பருவமழையின்றி வெப்பம் நீடிப்பதால், பல இடங்களில் பயிர் வாடியும், கருகியும் காணப்படுகிறது.

சோளப் பயிரை கால்நடைகள் விரும்பி சாப்பிடுகின்றன. இதனால், முற்றிய சோளப் பயிரை அறுவடை செய்து வெயிலில் காய வைக்கப்படுகிறது. தீவனத் தட்டுப்பாடு ஏற்படும் காலங்களில் கால்நடைகளுக்கு தீவனமாக வழங்கப்படுகிறது.

கோபியை அடுத்த கூகலூரை சேர்ந்த விவசாயிகள் கூறியதாவது: கோபி சுற்று வட்டாரத்தில் பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால், கால்நடைகளுக்கு சில வாரங்களுக்கு தீவன தட்டுப்பாடு ஏற்படும் சூழ்நிலை உருவாகி உள்ளது. சோளப் பயிரை வெயிலில் காயவைத்து பதப்படுத்தி, போராக போட்டு வைப்போம். கால்நடைகளுக்கு தேவையான போது தீவனமாக வழங்குவோம் என்றனர்.

**பசுந்தேயிலைக்கு வாழ்வாதார விலை தேயிலை வாரியத்தின் அறிவிப்பை ஏற்க முடியாது**

பசுந்தேயிலைக்கு வாழ்வாதார விலை நிர்ணயிப்பது தொடர்பாக தேயிலை வாரியம் வெளியிட்டுள்ள அறிவிப்பை ஏற்க முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக நீலகிரி மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் துணைத் தலைவரும், மஞ்சூர் இண்ட்கோ உறுப்பினர் நலச் சங்க தலைவருமான நீலகிரி வாசுதேவன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: அனைத்து தேயிலை தொழிற்சாலைகளுக்கும் விலை தொடர்பாக தேயிலை வாரியத்தின் உத்தரவு அனுப்பப்பட்டுள்ளது. வாரந்தோறும் தேயிலை ஏல மையங்களில் விற்பனை செய்யப்படும் தேயிலைத்தூளின் சராசரி விலை குறித்த விவரத்தை தேயிலை வாரியத்திற்கு தெரிவிக்க வேண்டுமெனவும், அதன் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள கண்காணிப்புக் குழு பசுந்தேயிலைக்கு உரிய விலையை நிர்ணயம் செய்யுமெனவும், உற்பத்தியாளர்களும் சராசரி விலையின்படி விலை

நிர்ணயம் செய்யலாம் எனவும், இதில் எது அதிகமோ அதை விவசாயிகளுக்கு வழங்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விற்பனையில் விலை நிர்ணயம் என்றால் அதில் ஏற்ற இறக்கங்கள் இருக்கும். இதற்காகவே உரிய விலை நிர்ணயிக்க வலியுறுத்தி போராட்டங்கள் நடத்தப்பட்டதோடு, நீதிமன்றத்தையும் அணுக வேண்டிய நிலை ஏற்பட்டது.

அதிகரித்துவரும் கூலி உயர்வாலும், தேயிலை செடிகளுக்கான உரங்களின் கூடுதல் விலையாலும், கவாத்து செய்தல், இலை பறித்தல் போன்றவற்றுக்கான செலவு அதிகரிப்பதாலும் சிறு மற்றும் குறு விவசாயிகளின் வாழ்வாதாரமே கேள்விக்குறியாகியுள்ள நிலையில், வாழ்வாதார விலை விவசாயிகளுக்கு சாதகமானதாக இல்லை.

உயர் நீதிமன்றத்தின் உத்தரவு விவசாயிகளுக்கு சாதகமாக இருந்தும், பசுந்தேயிலை கிலோவுக்கு எவ்வளவு என்பதை நிர்ணயிக்காமல் வார சராசரி விலையை விற்பனையை வைத்தே அதிகபட்ச விலை நிர்ணயம் செய்வது ஏமாற்றமளிப்பதாகும். இதை சிறு மற்றும் குறு விவசாயிகள் ஏற்கவே மாட்டார்கள்.

அனைவருக்கும் கட்டுப்படியாகக்கூடிய வாழ்வாதார விலையை நிர்ணயம் செய்ய நீதிமன்றம் அறிவுறுத்தும்போது, தேயிலை வாரியத்தின் அறிவிப்பு விவசாயிகளுக்கு பெரும் அதிர்ச்சியை அளித்துள்ளது. இத்தகைய வார விலை நிர்ணயத்தை நீலகிரி தேயிலை உற்பத்தியாளர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனரா என்பதை தெளிவுபடுத்த வேண்டும்.

எனவே, விவசாயிகளின் நலன் காக்க பசுந்தேயிலைக்கு உரிய வாழ்வாதார விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டுமெனவும் வாசுதேவன் தெரிவித்துள்ளார்.

**காய்கறிகள் உற்பத்தியைப் பெருக்க விவசாயிகளுக்கு 40% மானியத்துடன் கடன்**

தமிழகத்தில் காய்கறிகள் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கில், 40 சதவீத மானியத்துடன் வழங்கப்படும் கடனை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று தமிழக அரசின் வேளாண்மைத்துறை செயலாளர் சந்தீப் சக்சேனா தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறைகள் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பயிர் சாகுபடிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் சனிக்கிழமை நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற இக் கூட்டத்துக்கு, ஆட்சியர் அ.ஞானசேகரன் தலைமை வகித்தார்.

தமிழக அரசின் வேளாண்துறை முதன்மைச் செயலாளர் சந்தீப் சக்சேனா, தோட்டக்கலைத் துறை ஆணையர் சத்யபிரத சாஹூ ஆகியோர் மாவட்டத்தைச் சேர்ந்த வேளாண் மற்றும் தோட்டக்கலைத் துறை அலுவலர்களுடன் ஆய்வு நடத்தி, ஆலோசனைகள் வழங்கினர்.

கூட்டத்தில் வேளாண்மைத் துறை செயலாளர் சந்தீப் சக்சேனா பேசியது:

காய்கறிகள், கீரைகள், பழங்கள் மொத்த விற்பனையில் விவசாயிகளை நேரடியாக ஊக்குவிக்க தமிழக அரசு புதிய திட்டத்தை அறிவித்துள்ளது. இத் திட்டத்தின் கீழ் சென்னை புறநகர் காய்கறி உற்பத்தித் திட்டத்தில் விவசாயிகள் நேரடியாகவே காய்கறி விற்பனை செய்யலாம்.

காய்கறி விற்பனையை எளிதாக்க விவசாயிகள் அடங்கிய குழுக்கள் அமைக்கப்படுகின்றன. இக் குழுக்கள் மூலம் காய்கறிகள் மொத்தமாக சேகரிக்கப்பட்டு குழுத் தலைவர் அல்லது செயலாளர் மூலம் காய்கறிகள் விற்பனை செய்யப்படும்.

40 சதவீத மானியத்தில் கடன்:சென்னைக்குத் தேவையான காய்கறிகளை உற்பத்தி செய்ய திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம் மாவட்ட விவசாயிகளுக்கு 40 சதவீத மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்படுகிறது. சொட்டுநீர்ப் பாசனம் மூலமும் காய்கறிகளை உற்பத்தி செய்யலாம். காய்கறிகளை உற்பத்தி செய்யவும், உற்பத்தி செய்த காய்கறிகளை சேகரிப்பு மையத்துக்குக் கொண்டு செல்லவும் தேவையான சரக்கு வாகனம் வாங்கவும் இந்தக் கடன் பயன்படும்.

இத் திட்டங்கள் குறித்து வேளாண் துறை அதிகாரிகள் விவசாயிகளுக்கு எடுத்துச் சொல்லி விளக்க வேண்டும் என்றார் சந்தீப் சக்சேனா.

கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் ச.வளர்மதி, வேளாண்மைத்துறை இணை இயக்குநர் பன்னீர்செல்வம், தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர்

ஜெகநாதன், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சந்திரசேகரன், தோட்டக்கலைத் துறை அலுவலர் ஜெயச்சந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 118.62 அடியாக இருந்தது.**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 118.62 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 11,067 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 10,000 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து வினாடிக்கு காவிரியில் 2,800 கன அடி வீதமும், வெண்ணாற்றில் 2,000 கன அடி வீதமும், கல்லணைக் கால்வாயில் 2,704 கன அடி வீதமும், கொள்ளிடத்தில் 508 கன அடி வீதமும் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

**நேரடி நெல் விதைப்பில் அதிக விதைகளைப் பயன்படுத்தக் கூடாது**

நேரடி நெல் விதைப்பில் அதிக விதைகளை பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும் என வேளாண் வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து வேளாண் வல்லுநர்கள் வா. பழனியப்பன், பெ. வெங்கடேசன், பி. கலைவாணன் ஆகியோர் இணைந்து தெரிவித்திருப்பது:

திருவாரூர், நாகை மாவட்டங்களில் நிகழ் சம்பா பட்டத்தில் நேரடி நெல் விதைப்பு அதிகம் செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக, மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, திருவாரூர், முத்துப்பேட்டை, கொரடாச்சேரி, நீடாமங்கலம், கோட்டூர், கீழ்வேளூர், நாகப்பட்டிணம் ஆகிய பகுதிகளில் நீண்டகால ரகமான பொன்மணி (சி.ஆர். 1009) நெல் நேரடியாக விதைக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் பெய்த மழையில் இந்தப் பகுதிகளில் விதைக்கப்பட்ட நெல் நன்கு முளைத்துள்ளது. ஆனால், அனைத்து இடங்களிலுமே பயிர் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுகிறது.

அதாவது, சதுர மீட்டருக்கு சுமார் 500 முதல் 600 நெல் பயிர் முளைத்துள்ளது. இதற்கு விதை அளவை அதிகம் பயன்படுத்தியதே காரணம்.

ஒரு ஏக்கருக்கு ஆறு முதல் எட்டு கிலோ விதை பயன்படுத்தினாலே போதும். இவ்வளவு அதிக பயிர் தொகை பராமரிக்கப்பட்டால் மகசூல் வெகுவாக குறைவதற்கு வாய்ப்புகள் அதிகம் உள்ளன. இப்போது பயிர் முளைத்து ஒரு வார காலமே ஆவதால், உடனடியாகப் பயிரைக் கலைத்துவிட வேண்டும். கலைத்த பின்பு ஒரு சதுர மீட்டரில் அதிகபட்சம் 200 பயிருக்கு மேல் இருக்க கூடாது.

இந்த வாரத்துக்குள் களை எடுக்கும் கருவியைக் கொண்டு வரி வரியாகக் களையை மண்ணில் மடக்கி விடுவது போல் பயிரையும் மண்ணில் மடக்கி அமுக்கி விட வேண்டும். மடக்கிய பயிர் மீண்டும் வெளிவராதபடி மண்ணில் நன்றாக அழுத்தி விட வேண்டும். இதன்மூலம், களை எடுக்கும்போதே பயிர் கலைதலும் நடைபெறும்.

களை மிதிக்கும் கருவி இல்லாத பட்சத்தில் நடவு ஆள்களைக் கொண்டு களை மிதிப்பதுபோல் ஆங்காங்கே பயிரையும் மிதித்து மண்ணில் அமுக்கிவிட வேண்டும்.

எப்படியானாலும் அதிகப்படியாக உள்ள பயிர்கள் மண்ணில் மிதித்து அமுக்கி விடப்பட வேண்டும். இவ்வாறு செய்த பிறகு சதுர மீட்டரில் 200 பயிருக்கு மேல் இல்லாமல் இருப்பது மிகவும் அவசியம். அப்போதுதான் நேரடி நெல் விதைப்பில் நல்ல மகசூல் பெற முடியும்.

இந்தப் பருவத்திலேயே நடுத்தர கால வயதுடைய நெல் ரகங்களையும் சில விவசாயிகள் தவிர்க்க முடியாத காரணங்களால் விதைத்துள்ளனர்.

இந்தப் பயிர் பூக்கும் பருவத்தில் மழையால் பாதிப்புக்குள்ளாக அதிக வாய்ப்புள்ளது.

**தாட்கோ கடனுதவிக்கு விண்ணப்பிக்க காலக்கெடு நீட்டிப்பு**

திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் தாட்கோ மூலம், மானியத்துடன் கடனுதவி பெற விண்ணப்பிக்க காலக்கெடு நீட்டிக்கப்பட்டுள்ளது என்று மாவட்ட ஆட்சியர் சி. நடராசன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

இத்திட்டத்தில் கடனுதவி பெற ஏற்கெனவே ஆக. 10-ம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது, ஆக. 20-ம் தேதி வரை காலக்கெடு நீட்டிக்கப்பட்டுள்ளது.

திட்டத்தில் பயன்பெற விரும்பும் ஆதிதிராவிடர்கள் உரிய ஆவணங்களுடன்

ஹல்ல்ப்ண்ஸ்ரீஹற்ண்ர்ய்.ற்ஹட்க்ஸ்ரீர்.ஸ்ரீர்ம் என்ற இணையதள முகவரியில் விண்ணப்பத்தை ஆன்லைனில் பதிவு செய்ய வேண்டும்.

பதிவு செய்யும் போது, குடும்ப அட்டை எண் அல்லது இருப்பிடச் சான்று, ஜாதிச் சான்று, வருமானச் சான்று ஆகியவற்றின் எண், வழங்கப்பட்ட தேதி ஆகிய விவரங்களை உரிய இடத்தில் பதிவு செய்ய வேண்டும்.

இதேபோல், திட்ட அறிக்கை பெறப்பட்ட தேதியும் உரிய இடத்தில் பதிவு செய்ய வேண்டும். புகைப்படத்தை ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்ய வேண்டும். இவ்வாய்ப்பை ஆதிதிராவிடர்கள் பயன்படுத்திக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**வெள்ளாடு பராமரிப்பு விளக்கவுரை முகாம்**

குருந்தன்கோடு ஊராட்சியில் வெள்ளாடு பராமரிப்பு மற்றும் மேலாண்மை விளக்கவுரை முகாம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

அரசின் விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தில் நிகழாண்டில் 120 பேருக்கும், வெள்ளாடு பெருக்கும் திட்டத்தில் 9 பேருக்கும் தலா 10 ஆடுகள் வீதம் வழங்கப்பட்டன.

வெள்ளாடு வளர்ப்பு மற்றும் நவீன கால்நடைப் பராமரிப்பு குறித்த விழிப்புணர்வுக் கருத்துகள் எடுத்துரைத்து அதற்குரிய கையேடுகள் வழங்கும் முகாம் நடைபெற்றது.

கிடா மற்றும் பெட்டை வெள்ளாடுகளைத் தேர்வு செய்யும் முறை, மேய்ச்சலுடன் கூடுதல் தீவனம் இடும் முறை, பசுந்தீவனம், அடர் தீவன முறைகள் குறித்த தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கப்பட்டன.

வெள்ளாடு வளர்ப்பில் உருண்டைப்புழு, நாடாப்புழு, தட்டைப்புழு தாக்குதலால் பொருளாதார சேதம் ஏற்படும். எனவே, குடற்புழு நீக்கத்தை கால அட்டவணைப்படி மேற்கொள்ள பரிந்துரைக்கப்பட்டது.

முகாமில், குருந்தன்கோடு கால்நடை உதவி மருத்துவர் ரா. முருகேசன் பயனாளிகளுக்கு விளக்கினார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**19.08.2013**

## வங்கிகளில் கடன் பெற்ற விவசாயிகளும் வாழை பயிருக்கு காப்பீடு செய்ய வாய்ப்பு

தஞ்சாவூர்: "வாழை பயிருக்கு வெள்ளம், வறட்சி, நோய் தாக்குதலால் ஏற்படும் நஷ்டத்துக்கு ஈடுகட்ட, வங்கிகளில் கடன் பெற்ற விவசாயிகளுக்கும், வேளாண்மை காப்பீடு திட்டத்தில் காப்பீடு செய்ய வாய்ப்பு தரப்படுகிறது' என, தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் செல்வராஜ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:

தஞ்சை மாவட்டத்தில், 3,800 ஹெக்டேரில் தஞ்சை, திருவையாறு, பாபநாசம், கும்பகோணம், திருவிடைமருதூர் வட்டாரங்களில் அதிகளவில் வாழை பயிரிடப்பட்டு வருகிறது. இத்தகைய வாழை பயிர்களுக்கு வெள்ளம், புயல், வறட்சி மற்றும் பூச்சி நோய் தாக்குதலால் சேதம் ஏற்பட வாய்ப்புள்ளது.

இதனால் ஏற்படும் நஷ்டத்தை விவசாயிகள் ஈடு கட்டிக்கொள்ளும் வகையில், வேளாண்மை காப்பீடு திட்டத்தில் காப்பீடு செய்து கொள்ளலாம்.

இத்திட்டத்தின்கீழ் குத்தகைதாரர்கள் உள்பட அனைத்து விவசாயிகளும், வங்கி கடன் பெற்றவர்களும், வங்கிக்கடன் பெறாதவர்களும் பயன்பெற வாய்ப்பு அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தில், ஒவ்வொரு தேர்ந்தெடுக்கப்பட்ட பிர்காவில், தோட்டக்கலைத்துறையால் பயிர் அறுவடை காலத்தில், பத்து பயிர் அறுவடை சோதனைகள் நடத்தப்பட்டு, நடப்பு பருவத்தின் சராசரி மகசூல் கணக்கிடப்படுகிறது.

இந்த மகசூல், மூன்று ஆண்டுகளாக உத்தரவாத மகசூலுடன் ஒப்பிடும்போது, நடப்பு பருவத்தின் மகசூல் எவ்வளவு குறைந்துள்ளதோ, அந்த விகிதப்படி அந்த

பிர்காவில் காப்பீடு செய்த அனைத்து விவசாயிகளுக்கும், அவரவர் காப்பீடு செய்த தொகைக்கு ஏற்ப நஷ்டஈடு வழங்கப்படும். வாழை பயிருக்கு காப்பீடு செய்யப்படும் தொகைக்கு, 7.8 சதவீதம் பிரிமீயம், அதாவது, 10 ஆயிரத்துக்கு காப்பீடு செய்ய, 780 ரூபாய் பிரிமீயம் செலுத்த வேண்டும். இதில், கடன்பெறும் விவசாயிகளுக்கு, 50 சதவீத மானியமும், கடன்பெறாத சிறு, குழு விவசாயிகளுக்கு, 55 சதவீதமும், இதர விவசாயிகளுக்கு, 30 சதவீதமும் அரசால் வழங்கப்படும். காப்பீடு செய்ய கடைசி தேதி வரும் அக்டோபர், 15ம் தேதியாகும். மேலும் விபரங்களுக்கு அக்ரிகல்சர் இன்சூரன்ஸ் கம்பெனி ஆப் இந்தியா லிட், தஞ்சை ஒருங்கிணைப்பாளர் பழனியப்பன், மொஃபைல் போன். 94437-80661 எனும் எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## விதை நெல் கிடைக்காமல் விவசாயிகள் தவிப்பு 50 டன் விற்று விட்டதாக கைவிரிப்பு

காரைக்குடி : விதைப்பு பணியை மேற்கொள்ள விரும்பும் விவசாயிகள்,வேளாண்மை துறை அலுவலகத்தில் விதை நெல் கிடைக்காமல், வெளியே வாங்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

சாக்கோட்டை ஒன்றியத்தில் 4ஆயிரத்து 500 எக்டேரில் விவசாய பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் உள்ளனர். வானம் பார்த்த பூமி என்பதால், ஒரு போகம் மட்டுமே விளைச்சல்.

வேளாண்மை விரிவாக்க மையங்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி, தனியார் விற்பனை நிறுவனங்கள் மூலம், விவசாயிகளுக்கு தேவையான, கல்சர், டீலக்ஸ், ஏ.டி.45 ஆகிய ரக விதைகள், கிலோ ரூ.28.50க்கு விற்கப்படுகிறது. இதில், தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ், கிலோவுக்கு ரூ.5 மானியம் வழங்கப்படுகிறது. செப்டம்பரில் விதைப்பு பணிகளை மேற்கொள்ளும் வகையில், தற்போது விவசாயிகள் வேளாண்மை விரிவாக்க மையங்களில், விதைகளை வாங்க முகாமிட்டு வருகின்றனர். சாக்கோட்டை ஒன்றியத்தில் உள்ள விவசாயிகள்,

அதிக அளவு டீலக்ஸ் விதைகளையே விரும்புகின்றனர். ஆனால், வேளாண்மை அலுவலகத்துக்கு வரும் அவர்களுக்கு டீலக்ஸ் விதை கிடைப்பது இல்லை.சாக்கோட்டை ஒன்றியத்துக்கு இந்த ஆண்டு 125 டன் விதை நெல் ஒதுக்கப்பட்டுள்ளது.இதுவரை 50 டன் வரை விற்கப்பட்டுள்ளதாக,அதிகாரிகள் கூறுகின்றனர். ஆனால்,விவசாயிகள் விதை நெல் கிடைக்காமல் அலையும் நிலையில் தான் 50 டன் விற்பனையாகியுள்ளது.

சின்னத்தம்பி, விவசாயி, சின்னவடகுடிபட்டி: இரண்டு ஏக்கரில் விவசாயம் செய்து வருகிறேன். டீலக்ஸ் விதை வாங்கலாம், என்று சாக்கோட்டை வேளாண் விரிவாக்க மையத்துக்கு வந்தால், அவர்கள் காரைக்குடியில் உள்ள மையத்தில் சென்று வாங்க சொல்கின்றனர்.வந்த விதை எங்கே போனது என்று தெரியவில்லை. இரண்டு ஏக்கருக்கு 30 கிலோ விதை ஆகும். அங்கும் இங்கும் அலைவதால், மானியத்தொகை இதற்கே சரியாகி விடும். அலைச்சல்தான் மிச்சம்,என்றார்.

மணிவண்ணன், உதவி இயக்குனர், சாக்கோட்டை: டீலக்ஸ் ரக நெல் மட்டுமே இருப்பு இல்லை. கல்சர் உள்ளது. வேளாண் விரிவாக்க மையத்தில் இல்லை, எனில், தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி, தனியாரிடம் மானியத்தில் வாங்கி கொள்ளலாம். இதற்கான படிவங்கள் எங்களிடம் உள்ளது. டீலக்ஸ் விதை வந்தவுடன் தடையின்றி வழங்கப்படும், என்றார்.

## ரூ.39 லட்சம் மதிப்பிலான கொப்பரை தேங்காய் ஏலம்

பெருந்துறை: பெருந்துறை, வேளாண்மை உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனை கூட்டுறவு சங்கத்தில், வாரம் தோறும் புதன் மற்றும் சனிக்கிழமைகளில், கொப்பரை தேங்காய் ஏலம் நடக்கிறது.

நேற்று முன்தினம், கொப்பரை தேங்காய் ஏலத்துக்கு, பெருந்துறை மற்றும் அதன் சுற்று வட்டாரத்தில் இருந்து உற்பத்தியாளர்கள் கொப்பரை தேங்காய்களை, விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

மொத்தம், 2,601 மூட்டைகளில், 79 ஆயிரம் கிலோ கொப்பரை தேங்காய் கொண்டு வரப்பட்டது.

இதில் முதல் தரம் கொப்பரை தேங்காய் ஒரு கிலோ, 49.70 ரூபாய் முதல், 51.50 ரூபாய் வரை ஏலம் போனது. இரண்டாம் தரம் கொப்பரை தேங்காய், 30.90 முதல், 49.55 ரூபாய் வரை ஏலம் போனது.

மொத்தம், 39 லட்சம் ரூபாய் மதிப்பிலான கொப்பரை தேங்காய் விற்பனையானது.

இது கடந்த வாரத்தை விட கிலோவுக்கு, 2 ரூபாய் அதிகமாகும், என சங்கத்தலைவர் அருள்ஜோதிசெல்வராஜ் தெரிவித்தார்.

## தண்ணீர் திறப்பின்றி காய்ந்த கீழ்பவானி வாய்க்கால் சாகுபடிக்கு வாய்ப்பின்றி விவசாயிகள் கவலை

சென்னிமலை: கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீர் திறக்கப்படாததால், விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

ஈரோடு மாவட்டம் பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்கால் திருப்பூர் மாவட்டம் முத்தூர் அருகே மங்கலபட்டி வரை பாசன வசதி பெறுகிறது. இதன் மூலம் 2.07 லட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. இதில் கரும்பு, நெல், மஞ்சள், கடலை பயிர் செய்யப்படுகிறது.

ஆண்டு தோறும், கீழ்பவானியில் ஆகஸ்ட், 15ல் தண்ணீர் திறக்கப்பட்டு, நடவுப்பணி நடக்கும் இந்தாண்டு இதுவரை திறக்கப்படவில்லை.

இதுபற்றி, கீழ்பவானி விவசாயிகள் சங்க தலைவர் நல்லசாமி கூறியதாவது:

ஆண்டு தோறும் ஆகஸ்ட், 15ல் வாய்க்கால் திறப்பது வழக்கம் ஆனால் இந்த ஆண்டு காலிங்கராயன் வாய்க்காலில், 5 மாதத்துக்கு தண்ணீர் திறந்துள்ளனர்.

நெல்லுக்கு நான்கு மாதம் தண்ணீர் இருந்தால்போதும். ஆனால், சட்டப்படி முழு உரிமை பெற்ற கீழ் பவானி வாய்க்காலில், இதுவரை தண்ணீர் திறக்கவில்லை.

அதிகாரிகளை கேட்டால், பணிகள் நடத்து வருகிறது, என்கின்றனர்.

இந்தாண்டு நல்ல மழையால், பவானிசாகர் அணைக்கு தண்ணீர் வந்தும், கீழ்பவானியில் தண்ணீர் திறக்கவில்லை.

காவிரி நடுவர் மன்ற தீர்ப்புப்படி, அதிகாரிகள் சரியாக நீர் மேலாண்மை செய்யாமல் தொடர்ந்து குளறுபடி செய்து வருகின்றனர். இதற்கு இந்த தண்ணீர் திறப்பே ஒரு எடுத்துகாட்டாகும்.

தமிழக முதல்வர், உடனடியாக தண்ணீர் திறக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இதன் மூலம், பல லட்சம் விவசாய குடும்பங்கள் பிழைக்க வாய்ப்பு ஏற்படும், என்றார்.

இதுபற்றி, விவசாயிகள் கூறியதாவது:

ஆகஸ்ட், 15ல் தண்ணீர் வரும் என எதிர்பார்த்து, உழவுப்பணி செய்தோம். தண்ணீர் திறக்காதது ஏமாற்றத்தை அளிக்கிறது. கடந்தாண்டுகளில் வறட்சியால் விவசாயம் பாதித்தது. தற்போது தண்ணீர் இருந்தும், நாங்கள் ஏமாற்றப்படுகிறோம். இது விவசாயிகளுக்கு பெரும் இழப்பாகும், என்றனர்.

## பசுந்தேயிலை விலையில் தொடரும் இறங்குமுகம்

குன்னூர் : பசுந்தேயிலைக்கு மாத விலையாக 15 ரூபாய் நிர்ணயக்கப்பட்டுள்ளதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

நீலகிரியில் 65 ஆயிரம் சிறு விவசாயிகள் தேயிலை விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர். தங்கள் தோட்டஙகளில் அறுவடை செய்யும் பசுந்தேயிலையை சிறு தேயிலை தொழிற் சாலைகளுக்கு வழங்கி வருகின்றனர்.

"பசுந்தேயிலைக்கு வார விலை, மாத விலை' என இரு விலை நிர்ணயக்கப்படுகிறது. வாரந்தோறும் நடக்கும் தேயிலை ஏலத்தை கருத்தில் கொண்டு வார விலை நிர்ணயக்கப்படுகிறது. நான்கு வார விலைகளை கொண்டு மாத விலை நிர்ணயக்கப்படுகிறது. தேயிலை ஏல மையங்களில் கடந்த ஒரு மாத காலமாக தேயிலை தூளின் விலையில் சரிவு காணப்படுகிறது.

இதனால், பசுந்தேயிலைக்கும் விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. குன்னூர் பகுதியில் தற்போது சாரல் மழையுடன் பலத்த காற்று வீசுகிறது. பெரும்பாலான நாட்களில் வறண்ட காற்று வீசுவதால் தேயிலை செடிகளில் உள்ள ஈரப்பதம் நீங்கி விடுகிறது. குன்னூரில் நிலவி வரும் காலநிலை காரணமாக, பசுந்தேயிலையின் கொழுந்துகள் வஞ்சி கொழுந்துகளாக மாறி விடுகின்றன. இதனால், இந்த தேயிலையிலிருந்து தயாரிக்கப்படும் தூளுக்கு தரமில்லாமல் உள்ளது. இந்த தூளுக்கு கிராக்கி

இல்லாமல் வலையில் சரிவு ஏற்படுகிறது.
இந்த அடிப்படையில் கடந்த மாதம் சாதாரண ரகத்துக்கு 15.25 ரூபாய் விலை நிர்ணயக்கப்பட்டது. இந்த விலை கடந்த ஜூன் மாத விலையை விட 50 பைசா குறைவு. பசுந்தேயிலைக்கு விலை குறைந்து வருவதால், சிறு விவசாயிகள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

### விவசாயிகளின் முன்னேற்றத்துக்கு ரூ.200 கோடி ஒதுக்கீடு

கூடலூர் : "தேயிலை விவசாயிகள் முன்னேற்றத்துக்காக தேயிலை வாரியம் 200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது' என, தேயிலை வாரிய துணை தலைவர் தெரிவித்தார். கூடலூர் ஜானகியம்மாள் திருமண மண்டபத்தில், தேயிலை வாரியம், உபாசி கே.வி.கே., சார்பில், சிறு தேயிலை விவசாயிகளுக்கு "தேயிலை சாகுபடி' குறித்த பயிற்சி முகாம் நடந்தது. பயிற்சி முகாமை, தேயிலை வாரிய துணை தலைவர் கோஷிபேபி துவக்கி வைத்து பேசுகையில், ""நடப்பு நிதி ஆண்டில் தேயிலை விவசாயிகள் முன்னேற்றத்துக்காக தேயிலை வாரியம் 200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளது. தாழ்த்தப்பட்ட தேயிலை விவசாயிகளுக்கு 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. சிறு விவசாயிகளுக்கு ஒரு மாதத்தில் தேயிலை வாரியம் மூலம் "ஸ்மார்ட் கார்டு' வழங்கப்படும். கூடலூர் தேயிலை வாரிய அலுவலகம் தரம் உயர்த்தப்படுவதுடன், பந்தலூரில் தேயிலை வாரியம் அலுவலகம் திறக்கப்படும்,'' என்றார். தொடர்ந்த நடந்த பயிற்சியில், "இயந்திரங்கள் மூலம் தேயிலை சாகுப்படி' குறித்து, உபாசி கே.வி.கே., தலைவர் டாக்டர் ராமமூர்த்தி விளக்கினார். "தேயிலை செடிகளில் தாக்கும் பூச்சி நோய்கள்' குறித்தும், "அதனை தடுக்கும் வழிமுறைகள்' குறித்தும் உபாசி துணை இயக்குனர் ராதாகிருஷ்ணன் விளக்கினார். "தேயிலை செடிகளுக்கு உரம் இடும் முறைகள்' குறித்து உபாசி ஆலோசகர் சங்கரநாராயணன் பேசினார்.
முகாமில். சிறு தேயிலை விவசாயிகள் சங்க தலைவர் ஷாஜி, துணை தலைவர் கந்தசாமி, சாலிஸ்பரி கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை தலைவர் அபாஸ்,

உபாசி உதவி திட்ட அலுவலர் அன்பரசு மற்றும் சிறு விவசாயிகள் சங்க நிர்வாகிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### மகசூல் குறைவு பொருளாதார நெருக்கடி

கோத்தகிரி : கோத்தகிரி பகுதியில் தேயிலை தோட்டங்களில் மகசூல் குறைந்து வருவதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

மாவட்டத்தின் பிற பகுதிகளில் பருவமழை பெய்து, நீர் ஆதாரங்கள் நிறைந்துவரும் நிலையில், கோத்தகிரி பகுதியில், மழை பொய்த்து, எதிர்மாறான கால நிலை நிலவுவதால், விவசாயம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள் ளன.

கோத்தகிரி நகரம் உட்பட சுற்றுவட்டார பகுதிகளில், நீர் ஆதாரங்கள் வறண்டு, தண்ணீர் தட்டுப்பாடு உள்ளது. இது ஒருபுறம் இருக்க, தேயிலை தோட்டங்களிலும் ஈரப்பதம் குறைந்து, பசுந்தேயிலை மகசூல், படிப்படியாக குறைந்து வருகிறது. ஒரு மாதத்தில், சராசரியாக 1000 கிலோ வரை மகசூல் கிடைத்துவந்த தேயிலை தோட்டத்தில், தற்போது 200 கிலோ மட்டுமே மகசூல் கிடைக்கிறது. தேயிலை தோட்டம் அல்லாத நீர் ஆதாரமுள்ள நிலங்களில், சாகுபடி செய்துள்ள மலைக்காய்கறி பயிர்களும் வாடியுள்ளது. இதனால், விவசாயிகளுக்கு கூடுதல் இழப்பு ஏற்பட்டுள்ளது. தொழிலாளர்களுக்கும் வேலை இல்லாத நிலையில், பொருளாதார நெருக்கடி அதிகரித்துள்ளது.

### உணவு பதப்படுத்தலுக்கு மானியம்: தொழில் முனைவோருக்கு அழைப்பு

கரூர்: "தொழில்நுட்ப மேம்பாட்டு திட்டத்தில், உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைக்க அரசு வழங்கும் மானியம் வழங்குகிறது' என, கரூர் கலெக்டர் ஜெயந்தி தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

விவசாயிகள் குளிர்சாதன வசதி அமைப்பதற்கு, தோட்டக்கலை பயிர்கள் அல்லாத பொருட்களுக்கு, தொழில்நுட்ப மேம்பாட்டு திட்டத்தின் கீழ், கருவிகள், தளவாடங்கள், தொழில்நுட்ப கட்டுமானத்துக்காக, 35 சதவீதமும், அதிகபட்சமாக, ஐந்து கோடி ரூபாய் வரை மானியமாக, பால், இறைச்சி, நீர்வாழ் உயிரினம்

வளர்ப்பு ஆகிய தொழில்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது.

மனிதவள மேம்பாட்டு திட்டத்தின் கீழ், உணவு பதப்படுத்தும் தொழில்நுட்பம் தொடர்பான பட்டம், பட்டய படிப்புகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதற்கும், புத்தகங்கள், பரிசோதனைக்கூட கருவிகள் போன்றவைக்கும், அதிகபட்சமாக, ஒரு கோடி ரூபாய் மானியமாக அளிக்கப்படுகிறது.

தொழில் முனைவோர் பயிற்சி நடத்த, மத்திய, மாநில அரசுகள், தன்னார்வ தொண்டு நிறுவனம், பல்கலை, தொழிற்சாலை கூட்டமைப்புகளுக்கு, 3 லட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது. உணவு பதப்படுத்தும் பயிற்சி மையங்களுக்கு, ஒருபொருள் பயிற்சிக்கு அதிகபட்சமாக, 6 லட்சம் ரூபாய், நிலையான முதலீட்டிற்கும் மற்றும் சுழற்சி முதலீட்டிற்கும், மூன்று லட்சம் ரூபாய், பல பொருள் பயிற்சிக்கு அதிகபட்சமாக, 15 லட்சம் ரூபாய், நிலையான முதலீட்டிற்கும், சுழற்சி முதலீட்டிற்கும், 5 லட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது.

### நீரில் மூழ்கும் நெற்பயிர் விவசாயிகள் கவலை

திருக்கழுக்குன்றம்:திருக்கழுக்குன்றத்தில், சொர்ணவாரி பட்டத்தில் பயிரிடப்பட்ட, 100 ஏக்கர் நெற் பயிர்கள், அறுவடை நேரத்தில் மழை பெய்ததால், நீரில் மூழ்கி வீணாகி வருகின்றன. திருக்கழுக்குன்றம் தாலுகாவில், பாலாற்றங்கரையை ஒட்டியுள்ள மணப்பாக்கம், உதயம்பாக்கம், ஆலவாய், விளாகம், பாண்டூர் உள்ளிட்ட, 50க்கும் மேற்பட்ட கிராமங்களில், 100 ஏக்கர் பரப்பளவில், நெற்பயிர் பயிரிடப்பட்டு உள்ளது. நன்கு விளைந்து, அறுவடைக்கு தயாராக இருந்த நெற்பயிர்கள், சில நாட்களாக பெய்த தொடர் மழை காரணமாக, முழுவதும் நிலத்தில் மடிந்து, நீரில் மூழ்கி முளைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், சொர்ணவாரி பட்டத்தில், நெல் பயிரிட்டு, அறுவடைக்கு காத்திருந்த விவசாயிகளுக்கு, பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. மூன்று மாத உழைப்பில் விளைந்த நெற்பயிர்கள், அறுவடை நேரத்தில், நீரில் மூழ்கி உள்ளது, அப்பகுதியில்

சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. இதுகுறித்து, அப்பகுதி விவசாயிகள் கூறியதாவது: மூன்று மாதங்களுக்கு முன் நடவு செய்யப்பட்ட நெற்பயிர்கள், தற்போது அறுவடைக்கு தயாராக இருந்த நேரத்தில் மழை பெய்ததால், வீணாகிவிட்டன. ஒரு ஏக்கருக்கு, 15 ஆயிரம் செலவு செய்து உள்ளோம். ஆனால், செலவு செய்த பணமும் கிடைக்காத நிலை உள்ளது. வழக்கமாக, சொர்ணவாரி பட்டத்தில், ஏக்கருக்கு, 35 முதல் 40 மூட்டை வரை மகசூல் கிடைக்கும். ஆனால், தற்போது மழை பெய்ததால் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.இவ்வாறு அவர்கள் கூறினர்.

## விவசாயிகள் ஆலோசனை கூட்டம்

திண்டிவனம்:திண்டிவனம் ஜக்காம்பேட்டை பயணிகள் விடுதியில், பெரு நகர காய்கறி தொகுப்புகள் அபிவிருத்தி திட்டம் குறித்த ஆலோசனை கூட்டம் நடந்தது. கலெக்டர் சம்பத் தலைமை தாங்கினார். தோட்டக்கலை துணை இயக்குனர் ராசு வரவேற்றார். வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மை துறை அரசு செயலர் சந்தீப் சக்சேனா பேசியதாவது: விவசாயிகள்,பெரு நகர காய்கறி தொகுப்புகள் அபிவிருத்தி திட்டத்தின் மூலம் தரமான காய்கறிகளை உற்பத்தி செய்யலாம். இடைத்தரகர்களின் இடையூறின்றி நேரிடையாக ஏல முறையில் கொள்முதல் செய்தல், காய்கறி சேகரிப்பு மையங்கள் அமைத்தல்,வாகன வசதி போன்ற பல்வேறு சலுகைகள் அரசு மூலம் விவசாயிகளுக்கு கிடைக்கும். இதன் மூலம் காய்கறிகளை நல்ல விலைக்கு விற்கலாம்.இதனால் பெரு நகரங்களில் வசிப்பவர்களுக்கு காய்கறிகள் நியாயமான விலையில் கிடைக்கும். இவ்வாறு சந்தீப் சக்சேனா பேசினார். தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை ஆணையர் சத்யபிரதா சாகு,வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை ஆணையர் அனில்மேஷ்ராம்,வேளாண்மை இணை ஆணையர் விழுப்புரம் சக்கரவர்த்தி, உட்பட பலர் பேசினர். டாக்டர் அரிதாஸ் எம். எல்.ஏ., மாவட்ட வேளாண் விற்பனை துணை இயக் குனர் சண்முகம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## வறட்சியால் குடிநீர் தட்டுப்பாடு ஊற்று தண்ணீர் பருகும் பரிதாபம்

ஆத்தூர்: தலைவாசல், வீரகனூர் பகுதியில், குடிநீர் பஞ்சம் அதிகரித்துள்ளதால், வசிஷ்ட நதி மற்றும் சுவேத நதியில் பள்ளம் தோண்டி, ஊற்று தண்ணீரை, குடிநீராக பயன்படுத்தி வரும் பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது.

ஆத்தூர் சுற்றுவட்டார பகுதிகளில், இரண்டு ஆண்டுகளாக பருவ மழை பொய்த்து போனதால், வசிஷ்ட நதி, சுவேத நதி, நீரோடை, ஏரி, குளம் உள்ளிட்ட நீர் நிலைகள் வறண்டு விட்டது. அதேபோல், ஆத்தூர், நரசிங்கபுரம், தலைவாசல், வீரகனூர், பெத்தநாயக்கன்பாளையம் உள்ளிட்ட கிராம பகுதிகளிலும், கடும் வறட்சியால் குடிநீர் பஞ்சம் அதிகரித்துள்ளது.

கல்வராயன் மலையில் உற்பத்தியாகி, ஏத்தாப்பூர், பெத்தநாயக்கன்பாளையம், ஆத்தூர், தலைவாசல் வரை பாய்ந்து செல்லும் வசிஷ்ட நதி, கொல்லிமலையில் உருவாகி, தம்மம்பட்டி, கெங்கவல்லி, வீரகனூர் வழியாக செல்லும் சுவேத நதிகள், தொழுதூர் வெள்ளாற்றில் கலக்கிறது. வசிஷ்ட நதி மற்றும் சுவேத நதிகளில், கரை புரண்டு தண்ணீர் ஓடிய காலம் மாறி, மணல் கொள்ளையால், பாறை சுவடுகளாக காணப்படுகிறது. அதனால், ஆற்று பாசன பகுதி, கிணறுகளில் கூட நீர்மட்டம் குறைந்து விட்டது. இந்நிலையில், தலைவாசல் பகுதியில், குடிநீருக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், மும்முடி எம்.ஜி.ஆர்., நகர் பகுதியில் வசிக்கும் பொதுமக்கள், வசிஷ்ட நதியில் பள்ளம் தோண்டி, அதில் வரும் ஊற்று தண்ணீரை, குடங்களில் பிடித்துச் சென்று, குடிநீராக பருகி வருகின்றனர்.

அதேபோல், வீரகனூர் வழியாக செல்லும் சுவேத நதியில், வீரகனூர் வடகரை, தென்கரை, நல்லூர், திட்டச்சேரி, கவர்பனை, லத்துவாடி உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள், ஆற்றில் பள்ளம் தோண்டி, ஊற்று தண்ணீரை எடுத்துச் செல்லும் பரிதாப நிலை தொடர்ந்து வருகி றது. மாவட்ட நிர்வாகம் கவனத்தில் கொண்டு, ஆத்தூர் பகுதிகளில், குடிநீர் தேவைக்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என, பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**19.08.2013**

**வழக்கத்தை விட அதிகம் விற்பனை உச்சத்துக்கு சென்றது மீன் விலை**



சென்னை : சென்னை காசிமேடு மீன்பிடி துறைமுகத்தில் வழக்கமாக ஞாயிற்றுக்கிழமைகளில் மீன் வியாபாரம் களை கட்டும். இதுபோல் நேற்றும் மீன் வியாபாரம் களை கட்டியது. சென்னை நகரின் பல்வேறு பகுதிகளில் உள்ள பொதுமக்கள் வீடு, கோயில்களில் கூழ் வார்த்தல் நடத்துவது வழக்கம். இதன் முடிவில் மாலை நேரங்களில் கோயில்களில் கும்பம் போடுதல் நிகழ்ச்சியும், வீடுகளில் மீன் உள்ளிட்ட அசைவ உணவை சமைத்து உறவினரை வரவழைத்து விருந்தளிப்பது வழக்கம். இதற்காக நேற்று மீன்களை வாங்க காலை 6 மணிக்கே மக்கள் கூட்டம் குவிந்தது.

இதனால் விசைப்படகில் இருந்து பிடித்து கொண்டு வரப்பட்ட மீன்கள் கரையில் இறக்க இறக்க, அவற்றை உடனடியாக போட்டி போட்டு கொண்டு ஏலம் எடுத்தனர். இந்த போட்டியின் காரணமாக மீன்கள் விலை நேற்று பன் மடங்கு அதிகரித்தது. உதாரணமாக பொதுமக்கள் அதிகம் விரும்பி உண்ணும் வஞ்சிரம் கிலோ 350லிருந்து நேற்று 750 முதல் 800 வரை விலை போனது. வௌவால் 200லிருந்து 700க்கு போனது.

பாறை 130லிருந்து 500க்கு போனது. இப்படி அனைத்து மீன்களுமே உச்சத்தை தொட்டதால் விரைவில் மீன்கள் விற்று தீர்ந்தன. இதனால் மீன்கள் வாங்க தாமதமாக வந்த மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர். மீனவர்கள் கூறுகையில், ‘‘வழக்கமாக ஞாயிற்றுக்கிழமைகளில் 2 டன் மீன்கள் விற்பனை யாகும். ஆனால் நேற்று 3 டன் மீன்கள் கிடைத்தும் அவை விரைவில் விற்றது டன் நல்ல விலைக்கு போயின’’ என்றனர்.

எக்ஸ்ட்ரா தகவல்  தமிழகத்தில் ஒரு நாளைக்கு 300 டன் வரை மீன்கள் பிடிக்கப்படுகிறது. இதில் 30 முதல் 33 சதவீதம் ஏற்றுமதியாகிறது. இதன் மூலம் ஆண்டுக்கு 35,000 கோடி (இந்தியா முழுவதும்) அன்னிய செலவாணி ஈட்டி தருகிறது. இதில், தமிழகத்தின் பங்கு 17 சதவீதம்.

**பஞ்சு விலையேற்றம் எதிரொலி நூல் விலை கிடுகிடு உயர்வு ஜவுளி தொழிலில் நெருக்கடி**



சேலம் : வட மாநிலங்களில் தொடர் மழை, தெலங்கானா பிரச்னை போன்ற காரணங்களால் பருத்தி பஞ்சு வரத்து குறைந்து விலை அதிகரித்துள்ளது. இதனால் நூல் விலையும் கிலோவுக்கு ரூ.10 வரை உயர்ந்துள்ளது. தமிழகத்தில் கடந்த இரு ஆண்டுகளாக மின்வெட்டு பிரச்னையால் ஜவுளி தொழில் நெருக்கடியை சந்தித்து வருகிறது. ஏராளமான தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர். கடந்த மூன்று மாதங்களாக நிலைமை ஓரளவுக்கு சீரடைந்து வருகிறது. மின்வெட்டும் குறைந்துள்ளது.

தற்போது பஞ்சாலைகளில் நூல் உற்பத்தியில் தீவிர கவனம் செலுத்தி வரும் நிலையில் பஞ்சு வரத்து குறைந்து விலை அதிகரித்துள்ளது. கோவை, திருப்பூர், ஈரோடு, திண்டுக்கல், நாமக்கல் பகுதியில் உள்ள பஞ்சாலைகளில் இருந்து ஜவுளி உற்பத்திக்கான நூல் சப்ளை செய்யப்படுகிறது. பஞ்சு விலை ஒரு கண்டி (355.6 கிலோ) 20 சதவீதம் வரை அதிகரித்துள்ளது. இங்குள்ள பஞ்சாலைகளில் அதிகமாக பயன்படுத்தப்படும் நீண்ட இழை பருத்தியான சங்கர்,6 ரகம் மட்டும் ஒரு கண்டி ரூ.46 ஆயிரம் முதல் ரூ.48 ஆயிரம் வரை விற்பனை செய்யப்படுகிறது. அதற்கேற்ப நூல் விலையும் உயர்ந்துள்ளது.

சேலம் செவ்வாய்பேட்டையில் இயங்கும் நூல் மார்க்கெட்டில் இருந்து உள்ளூர் மற்றும் கர்நாடகாவுக்கும் நூல் சப்ளை செய்யப்படுகிறது. நூல் விலையேற்றம் குறித்து வியாபாரிகள் கூறியதாவது: குமாரபாளையம், பவானி, பள்ளிப்பாளையம், ஜலகண்டாபுரம், சென்னிமலை, அம்மாப்பேட்டை, குகை, நங்கவள்ளி, தாரமங்கலம், காங்கேயம், ஈரோடு, ஆந்திராவில் நகரி, சிராஹள்ளி, கர்நாடகாவில் பன்ஹட்டி பகுதிகளுக்கு நூல் சப்ளை செய்கிறோம்.

கடந்த 15 நாட்களுக்கு முன்பு 4.5 கிலோ (ஒரு பேக்) ரூ.790க்கு விற்ற 20 சிங்கிள் சிட்டா நூல் தற்போது ரூ.850 ஆக உயர்ந்துள்ளது. அதேபோல் 30 கவுன்ட் 980க்கு விற்பனை செய்யப்பட்டு தற்போது ரூ.1021 எனவும், 40 கவுன்ட் ரூ.990 லிருந்து ரூ.1050ஆகவும், 2/40 கவுன்ட் ரூ.1030 லிருந்து ரூ.1120 ஆகவும், 2/20 கவுன்ட் ரூ.1010லிருந்து ரூ.1040 எனவும், 2/60 கவுன்ட் ரூ.1280 லிருந்து ரூ.1320 ஆகவும், 2/80 கவுன்ட் ரூ.1950லிருந்து ரூ.1970 ஆகவும் உயர்ந்துள்ளது. சராசரியாக பெரும்பாலான ரக நூல்கள் கிலோவுக்கு ரூ.10 முதல் ரூ.15 வரை அதிகரித்துள்ளது. இவ்வாறு வியாபாரிகள் கூறினர்.

தற்போது விலை உயர்ந்துள்ள ரக நூல் பெரும்பா லும் விசைத்தறி, கைத்தறி கூடங்களில் பயன்படுத்தக்கூடியவை. நூல் விலையேற்றத்தால் இரு தொழில்களும் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்தியாவில் நடப்பு பருத்தி ஆண்டில் 116.14 லட்சம் ஹெக்டேரில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில் 334

லட்சம் பேல் பஞ்சு உற்பத்தி செய்யப்படும். ஒரு ஹெக்டேருக்கு 489 கிலோ உற்பத்தியாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

**முட்டை விலை 10 காசு உயர்வு**



நாமக்கல்: நாமக்கல் முட்டை விலையில் 10 காசு உயர்ந்துள்ளது. நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் முட்டை விலையில் 10 காசுகள் உயர்த்த முடிவு செய்யப்பட்டது. இதை தொடர்ந்து முட்டையின் பண்ணை கொள்முதல் விலையான 310 காசுகளில் இருந்து 10 காசுகள் அதிகரித்து 320 காசுகளாக விலை நிர்ணயிக்கப்பட்டது. மற்ற மண்டலங்களில் முட்டை விலை விபரம்: (காசுகளில்) சென்னை- 322, பெங்களூர்- 300, மும்பை- 318. ஒரு கிலோ முட்டைக்கோழி ரூ.58 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி ரூ. 81 ஆகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**19.08.2013**

## கொடைக்கானலில் 2–வது நாளாக பலத்த மழை ஏரிகளில் நீர்மட்டம் உயர்வு

கொடைக்கானலில் நேற்று 2–வது நாளாக பலத்த மழை பெய்தது. இதனால் ஏரிகளில் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

2–வது நாளாக பலத்த மழை

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் நேற்று முன்தினம் லேசான சாரலுடன் மழை பெய்தது. இந்நிலையில் நேற்று பகலில் குளிர்ந்த காற்றுடன் லேசான சாரல் மழை பெய்ய தொடங்கியது. பிற்பகல் 2 மணி முதல் 3.30 மணிவரை பலத்த மழை பெய்தது.

பலத்த மழையால் குடிநீர் வழங்கும் ஏரி, கொடைக்கானல் ஏரி ஆகியவற்றில் நீர்மட்டம் உயர்ந்தது. வெள்ளி நீர்வீழ்ச்சியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. விவசாயிகளும், பொதுமக்களும் மகிழ்ச்சி அடைந்தனர்

சுற்றுலா பயணிகள் அவதி

ரோடுகளில் மழைநீர் வெள்ளம் போல் பெருக்கெடுத்து ஓடியது. மழையால் வாகன போக்குவரத்து பாதிக்கப்பட்டது. நேற்று விடுமுறை நாளாக இருந்ததால் சுற்றுலா பயணிகள் அதிக அளவில் வருகை தந்து இருந்தனர்.

எனவே ஓட்டல்களில் கூட்டம் நிரம்பி வழிந்தது. இந்த மழையால் பிரையண்ட் பூங்காவில் சுற்றுலா பயணிகள் கூட்டம் சற்று குறைந்து காணப்பட்டது. சுற்றுலா பயணிகள் படகுசவாரி பயணம் செய்ய முடியாமல் தவித்தனர்.

## இளைய சமுதாயத்தினருக்கு சிறுதானியங்கள் பயிரிடும் முறையை விவசாயிகள் கற்றுத்தர வேண்டும்

ராமநாதபுரம்,

வருங்கால இளைய சமு தாயத்தினருக்கு சிறு தானியங்கள் பயிரிடும் முறையை விவசாயிகள் கற்றுத்தர வேண்டும் என்று விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டத் தில் ஓய்வுபெற்ற நீதி பதி வேண்டுகோள் விடுத் தார்.

<u>குறைதீர்க்கும் கூட்டம்</u>

ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் நந் தகுமார் தலைமையில் நடை பெற்றது. இதில் மதுரை மாவட் டத்தை சேர்ந்த ஓய்வு பெற்ற நீதிபதி சடையாண்டி, திரு வாரூர் மாவட்டத்தை சேர்ந்த ஜெயராமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் ஓய்வு பெற்ற நீதிபதி சடையாண்டி கூறிய தாவது:- விலைவாசி உயர்வு, இயற்கை சூழ்நிலையின் மாற் றங்களினால் விவசாயி கள் நெல் சாகுபடி செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர். இத னால் காலப்போக்கில் சிறு தானியங்கள் பயிரிடுவது குறைந்து விட்டது. நாம் தற் போது உற்பத்தி செய்யும் அரி சியை விட சிறுதானியங் கள் அதிக சத்துக்கள் நிறைந்தவை யாகும். அதிக நன்மையை தரக் கூடியதாகவும் இருக்கி றது.

<u>சிறுதானியங்கள்</u>

தற்போது சிறு தானியங்க ளுக்கு நல்ல விலை கிடைத்து வருகிறது. மேலும் நெல் பயிரி டும் செலவைக்காட்டிலும் இதனை பயிரிட செலவு, இடு பொருட்களின் தேவை ஆகியவை குறை வாக உள்ளது. மேலும் இவற்றில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாக உள்ளது. எனவே வருங்கால இளைய தலைமுறையினருக்கு இவற்றின் அவசியம் மற் றும் பயிரிடும் முறையை விவசாயிகள் கற்றுத்தர வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

அதனை தொடர்ந்து ஜெய ராமன் பேசும்போது, “பாரம் பரிய நெல் உடலுக்கு நல்ல பலன் தரக்கூடியது. இவற்றை சாப்பிடுவதால் நோய்கள் அதி கம் வராது. இவை இயற்கை இடர்பாடுகளை தாங்கி வள ரக்கூடியது. அதிக தண்ணீர் தேவைப்படாது என்பதால் எளிதாக பயிரிட முடியும். அதிக மகசூலை பெறுவதற்கு விதை தேர்வு, விதை பாது காப்பு, மண் தேர்வு மிக அவ சியமாகும்” என்றார்.

<u>பாரம்பரிய விதை</u>

கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாயிகள் சிலருக்கு மாப்பிள்ளை சம்பா, பூங் காரம் போன்ற பாரம்பரிய விதை நெல்லை கலெக்டர் நந்தகுமார் வழங்கினார். நிகழ்ச்சியில் கலெக்டரின் நேர்முக உதவியாளர் சவுந்திர ராஜன், வேளாண் இணை இயக்குனர் சக்தி மோகன் மற் றும் விவசாயிகள் திரளாக கலந்து கொண்டனர்.